08.11.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### திருமழபாடியில் விதை கிராமத் திட்ட பயிற்சி



அரியலார் மாவட்டம், திருமழபாடி கிராமத்தில் விதை கிராமத் திட்ட பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை, விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த பயிற்சி நடைபெற்றது. வட்டார வேளாண் உதவி இயக்குநர் ஆ. சாந்தி தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் ரெ. சதானந்தம் பயிற்சியை தொடக்கி வைத்து, விதை உற்பத்தி செய்வது குறித்தும், பிரதான் மந்திரி பயிர் காப்பீடு திட்டம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

வேளாண் துணை இயக்குநர் பா. மனோகரன் பங்கேற்று பேசுகையில், நெல் பயிர் சாகுபடியில் முக்கிய தொழில்நுட்பங்களான பசுந்தாள் உர பயிரினை மடக்கி உழும்போது ஏக்கருக்கு 15 கிலோ யூரியா இடுவதன் மூலம் மக்கும் திறன் அதிகரிக்கும்.

தழைச்சத்து மற்றும் சாம்பல் சத்தினை பிரித்து அளிப்பதன் மூலம் உர உபயோக திறன் அதிகரிப்பதுடன் உரம் விரயமாவதை தடுக்க முடியும் என்றார் அவர்.கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜாஜோஸ்லின் கலந்து கொண்டு, நெல் பயிரில் ரக தேர்வு, விதை நேர்த்தி, உரம் மற்றும் ஊட்டச்சத்து நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை குறித்து விளக்கினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ந. கலைமதி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பி. அன்பழகன், ராஜலட்சுமி, வேளாண் உதவி அலுவலர் க. ராதா ஆகியோர் செய்திருந்தனர்.

## பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே சொந்த நிலத்தில் வேப்பந்தோப்பை உருவாக்கிய பேராசிரியர்

**புதுக்கோட்டை:** பொதுவாகவே சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் பெரும்பாலும் நெல், கரும்பு உள்ளிட்ட உணவு தானியங்களை உற்பத்தி செய்வதிலேயே ஆர்வம் காட்டுவார்கள். வேளாண் பணியை நேரடிப் பார்வையில் செய்ய இயலாதவர்கள் சுமார் 4, 5 ஆண்டுகளில் பயன்தரக்கூடிய தென்னை மரங்களை நடவு செய்து அதன் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

ஆனால் அன்றாடமோ, சில பல ஆண்டுகளிலோ எவ்வித நேரடிப் பயனையோ, வருவாயையோ பெரிதாகத் தரமுடியாத வேம்பு மரங்களை தனக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்தில் வளர்த்து மரம் வளர்க்கும் ஆர்வலர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளார் புதுகையைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியர். புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் அருகே தக்கிரிப்பட்டியில் உள்ள தனக்கு சொந்தமான நிலத்தில் வேப்பந்தோப்பை உருவாக்கியது குறித்து புதுக்கோட்டை மன்னர் அரசுக் கல்லூரி உதவிப் பேராசிரியர் ஆர். கருப்பையா (54) கூறியது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் பாறைகள் நிறைந்த பகுதியாக உள்ள தக்கிரிப்பட்டி வறட்சியான பகுதி. இங்கு சிறுதானியங்களை பயிரிடுவதுகூட கடும் சவாலாகவே உள்ளது. இதன்காரணமாக பெரும்பாலான விளைநிலங்கள் தரிசு நிலங்களாகவே உள்ளன.

நான் கல்லூரி மாணவராக இருந்தபோது கோட்டத்தில் கால்நடை தீவனப்புல் மரத்தை நல்ல முறையில் வளர்த்ததற்காக திருச்சி வனத் துறையினர் சார்பில் எனக்கு பரிசு கிடைத்தது. அந்த நிகழ்வுதான் மரம் வளர்க்கும் ஆர்வத்துக்கு உந்துசக்தியாக அமைந்தது.

இதைத்தொடர்ந்து தக்கிரிப்பட்டி, காவேரி நகர் பகுதியில் உள்ள பொதுஇடங்களிலும், அதேகிராமத்தில் உள்ள கண்மாய்களிலும், குளத்திலும் சுமார் 200 கன்றுகள் எனது முயற்சியால் நடப்பட்டது. ஆனால் பொதுஇடங்களில் மரக்கன்று நடுவதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து எனது 2 ஏக்கர் நிலத்தில் கடந்த 2013-ல் சுமார் 500 வேப்பமரக்கன்றுகளை நட்டு வளர்த்தேன். 3 ஆண்டுகளில் வேப்பந்தோப்பாக மாறியுள்ளது. வறட்சி காலத்தில் தண்ணீர் ஊற்ற நேரிட்டது. கடந்த 6 மாதங்களாக தண்ணீர் ஊற்றும் சூழ்நிலை ஏற்படவில்லை. தற்போது காய்ப்பு தொடங்கிவிட்டது.

அரிதாகிவிட்ட வேம்புவின் தேவை அதிகரித்து வருவதால், இன்னும் 3 ஆண்டுகளில் ஆண்டுக்கு ரூ. 2 லட்சத்துக்கு விதைகளை விற்பனை செய்யலாம். மேலும் எனது தோப்பில் ஏராளமான பறவைகள் கூடுகட்டித் தங்கத் தொடங்கிவிட்டன. இந்தப் பறவைகள் மூலம் விதை பரவலாக்கம் செய்யப்படும்போது இயற்கையாகவே இப்பகுதியில் வேப்பங்காடு உருவாகிவிடும்.

தைலமரங்கள் சூழலுக்கு கேடு விளைவிக்கக்கூடியவை. எனவே, அதற்குப் பதிலாக வேப்பமரங்களை வளர்த்தால் கூடுதல் லாபம் பெறலாம். நான் உருவாக்கியுள்ள வேப்பந்தோப்பானது எங்களது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல இந்தப்பகுதியினருக்கே ஆரோக்கியத்தைக் கொடுக்கும். சுற்றுச்சூழலும் மேம்படும். இதை மற்றவர்களும் பின்பற்றினால் தமிழகம் சுகாதாரத்தின் அரணாக மாறும். எனது நோக்கமும் நிறைவேறும் என்றார்.

வேப்ப எண்ணெய் உணவுக்கும், விளக்கெரிக்கவும், தோல் நோய்களுக்கு மருந்தாகவும், இலை கொசு விரட்டியாகவும், இயற்கை பூச்சிக் கொல்லியாகப் பயன்படுத்தப்படுகிறது. மரப்பட்டை காய்ச்சலை போக்கவும் பயன்படுகிறது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நீர் நிலைகளை தூர்வார அழைப்பு

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஏரி, குளம், குட்டைகளை தூர்வாரி அகலப்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து ஆய்வு மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம், வரும், 10ல் கலெக்டர் பிரபாகர் தலைமையில் நடக்க உள்ளது. இதில், அரசு நிலங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றுதல், தூர்வாரி குளங்களை செப்பனிடுதல் தொடர்பாக ஆய்வு நடத்தப்படுகிறது. ஆர்வமுள்ள மற்றும் அரசுடன் இணைந்து செயல்பட விருப்பம் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனியார் அமைப்புகள் பங்கேற்கலாம் என, கலெக்டர் பிரபாகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பசுந்தேயிலை மகசூல் குறைவு கவாத்து பணியில் விவசாயிகள்

கோத்தகிரி: கோத்தகிரி பகுதியில் மழைப் பொய்த்து, பசுந்தேயிலை மகசூல் குறைந்துள்ளதால், தோட்டங்கள் கவாத்து செய்யப்படுகிறது.

பருவமழை அறவே பொய்த்துவிட்ட நிலையில், நீர் ஆதாரங்கள் வறண்டு, விவசாய நிலங்களில் ஈரப்பதம் குறைந்துவிட்டது. இதனால், தேயிலை விவசாயிகளுக்கு மகசூல் வெகுவாக குறைந்துவிட்டது. காய்ந்துள்ள தேயிலை செடிகள் மீண்டும் பழைய நிலைக்கு வரவேண்டும் எனில், மழைப்பெய்தாக வேண்டும்.

அதுவரை, விவசாயிகள் இழப்பை சந்திக்கவேண்டும் என்பதால், மழை நாட்களில் மகசூல் கிடைக்கும் வகையில், தற்போது, தோட்டங்களை கவாத்து செய்து வருகின்றனர்.

விவசாயி போஜன் கூறுகையில்,“மழை பெய்யாததால், கவாத்து வெட்டாத தோட்டங்களில் பசுந்தேயிலை மகசூல் கிடைக்க வாய்ப்பில்லை. தோட்டத்தை

அப்படியே விட்டால், செடிகள் நாசமாகும் என்பதால் விவசாயிகள் கவாத்து வெட்டி வருகின்றனர்," என்றார்.

## மாயனூர் தடுப்பணையில் மீன் விற்பனை அமோகம்

கிருஷ்ணராயபுரம்: மாயனூர் தடுப்பணை காவிரி ஆற்றில் தற்போது அதிகமான மீன்கள் வரத்து அதிகரித்துள்ளதால், சுற்றுலா பயணிகள் மீனவர்களிடம் நேராடியாக மீன்கள் வாங்கிச் செல்கின்றனர். கிருஷ்ணராயபுரம் தாலுகா, மாயனூர் காவிரி ஆற்றின் குறுக்கே, வெள்ள காலங்களில் வரும் உபரிநீர் தேக்க தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. இந்த தடுப்பணைக்கு, மேட்டூர் பகுதியில் இருந்து வரும் தண்ணீர் மூலம், மீன்கள் கிடைக்கிறது. தற்போது ஆற்றில் அதிகமான மீன்கள் உற்பத்தியாகி உள்ளன. இவற்றை, மீனவர்கள் பிடித்து, கிலோ, 80 ரூபாய் வரை, தடுப்பணை பகுதியில் விற்று வருகின்றனர். உயிருடன் உடனுக்குடன் பிடித்து தருவதால், கரூர், திருச்சி, காட்டுப்புத்தூர், சிலைப்பிள்ளைபுத்தூர் பகுதிகளை சேர்ந்த மக்கள் ஆர்வமுடன் வாங்கிச்செல்கின்றனர்.

## மண்புழு உரம் தயாரிப்பு கட்டுமானப்பணி நிறுத்தம்

நங்கவள்ளி: நங்கவள்ளியில், மண்புழு உரம் தயாரிப்புக்கான பணி, பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. நங்கவள்ளி ஒன்றியத்தில், ஒன்பது கிராம பஞ்சாயத்துக்கள் உள்ளன. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம், மக்கும் குப்பைகளை தனியாக பிரித்து, அவற்றிலிருந்து, மண்புழு உரம் தயாரிக்கும் வகையில், பெரியசோரகை பஞ்சாயத்து, தாசகாபட்டியில், 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மண்புழு உரம் தயாரிப்பு தொட்டி, அமைக்கப்பட்டு வருகிறது. இதை பார்வையிட்ட, நங்கவள்ளி ஒன்றிய முன்னாள் சேர்மன் ஜீவானந்தம், 'தொட்டி எதற்காக கட்டப்படுகிறது. எந்த நிதியில் இருந்து கட்டப்படுகிறது' என்று, கட்டட பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களிடம் கேட்டுள்ளார். இதுகுறித்து எதுவும் தெரியாது என, தொழிலாளர்கள் கூறியதால், கட்டுமானப் பணியை நிறுத்தும்படி, கூறிவிட்டு, முன்னாள் சேர்மன் சென்று விட்டார். இதனால், பத்து நாட்களாக, பணி முழுமை பெறாமல் பாதியில் நிற்கிறது.

## விவசாயிகளுக்கு மானியம்: பதிவு செய்ய அழைப்பு

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் உதவி இயக்குனர் அசோகன் வெளியிட்டுள்ள அறிக்கை: பயறு உற்பத்தியை அதிகரிக்க, மானிய விலையில், திரவ உயிர் உரங்கள், ஒரு லிட்டர், ஐந்து கிலோ நுண்சத்து, 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகின்றன. பயிர்களை வரிசை நடவு செய்பவர்களுக்கு (ஏக்கருக்கு), 1,000 ரூபாய் பின்னேற்பு மானியம், ஐந்து கிலோ பயறு வளர்ச்சி ஊக்கிக்கு, 650 ரூபாய், வரப்பு பயிராக பயிரிடுபவர்களுக்கு, 150 ரூபாய் வழங்கப்படுகிறது. இலை மூலம் டி.ஏ.பி., தெளித்து உற்பத்தியை அதிகரித்தால், 650 ரூபாய், களைக்கொல்லி பயன்படுத்துபவர்களுக்கு, 500 ரூபாய், பயிர்பாதுகாப்பு மருந்து பயன்படுத்துபவர்களுக்கு, 500 ரூபாய், ஜிப்சம் பயன்படுத்தினால், 165 ரூபாய், நுண்சத்து பயன்படுத்தினால், 500 ரூபாய் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். நிலக்கடையில், துவரையை ஊடுபயிராக பயிரிட்டவர்களுக்கு, 7,500 ரூபாய் மானியமாக வழங்கப்படும். விவசாயிகள் முன்னுரிமை பதிவு செய்து, மானிய விலையில் இடுபொருட்களை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ஆசிரியர் பணியை உதறிவிட்டு விவசாயத்தில் சாதிக்கும் பெண்

சாயல்குடி;ஆசிரியர் பணியை உதறிவிட்டு விவசாயத்தில் இளம்பெண் சாதனை நிகழ்த்தி வருகிறார்.சாயல்குடி அருகே குதிரைமொழி கிராமத்தை சேர்ந்தவர் ஸ்ரீதேவி,28. டிப்ளமோ ஆசிரியர் பயிற்சி முடித்துள்ளார். இவரது கணவர் விவசாயி விக்னேஷ் ராம்,33. இவர்களுக்கு 2 மகள் 1 மகன் உள்ளனர். இவர்களுக்கு அதே பகுதியில் 5 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. கடற்கரையை ஒட்டியுள்ள பகுதி என்பதால் விவசாயம் நிலம் உவர்ப்பு தன்மை உடையதாக உள்ளது.

இருந்தும் மனம் தளராத தம்பதியினர் இருவரும் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறையினரிடம் ஆலோசனைகள் பெற்று அந்த நிலத்தை பொன் விளையும் பூமியாக மாற்றியுள்ளனர். மா, புளி, முந்திரி, கொய்யா, எலுமிச்சை, சப்போட்டா, நார்த்தங்காய், கொடுக்காப்புளி, நாவல், தென்னை, தேக்கு உள்ளிட்ட பலன்தரும் மரங்களை நடவு செய்துள்ளனர்.

ஊடு பயிராக கால்நடைகளுக்கான கட்டைப்புல் சாகுபடி செய்துள்ளனர். பயிர்களுக்கு இயற்கை உரம் மட்டுமே பயன்படுத்துகின்றனர். மரங்கள் பலனளிக்க துவங்கியுள்ளதால் தம்பதியினர் நல்ல வருமானத்தை ஈட்டி வருகின்றனர்.

விவசாயி ஸ்ரீதேவி கூறுகையில்,“ ஆசிரியர் பயிற்சி முடித்த பின்னர், கிடைத்த அரசு வேலையை உதறிவிட்டு கணவருடன் இணைந்து விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறேன். கடந்த 10 ஆண்டுகளில் வகை, வகையான பலன்தரும் மரங்களை நட்டு அதன் மூலம் வருமானம் ஈட்டிவருகிறோம். விவசாயத்திற்கு பயன்படாத உவர் மண்ணை, மண் மாதிரி மூலம் ஆய்வு செய்து, அதிகளவில் மக்கிய இயற்கை உரங்களான கால்நடை கழிவுகள், மண்புழு உரம் இவற்றின் மூலம் நுண்ணூட்டம் செய்து விவசாயத்திற்கு உகந்ததாக மாற்றியுள்ளோம்.

இங்கு 15 அடியில் நல்ல தண்ணீர் கிடைப்பதால், கிணற்று பாசனத்தில் மகசூல் ஈட்ட முடிகிறது. பெரும்பாலான நேரங்களை விவசாயத்தில் செலவிடுகிறேன். மாலையில் அருகில் உள்ள பள்ளி குழந்தைகளுக்கு வகுப்புகள் எடுக்கிறேன். இதுவரை வேளாண்மைத்துறையின் மூலம் எந்தவித உதவிகளும், இலவச மின்சாரம், மானியமும் பெறவில்லை. அரசு ஊக்குவித்தால், என்னைப்போன்ற படித்த பெண்களுக்கு உதவிகரமாக இருக்கும்,” என்றார்.

## இளையான்குடியில் விவசாய பணிகள் ஆரம்பம்

இளையான்குடி; இளையான்குடியில் வடகிழக்கு பருவ மழை துவங்கியதையடுத்து வயல்களில் களையெடுப்பு பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இளையான்குடியில் சில ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகள் வயல்களின் ஒரு பகுதியில் நாற்றங்காலில் நாற்று பாவி,நன்கு மழை பெய்ததும் அந்த நாற்றை பிடுங்கி நடவு செய்து வந்தனர்.பருவ மழை அளவு குறைய துவங்கியதையடுத்து விவசாயிகள் நடவு செய்யும் முறையை கைவிட்டுவிட்டனர்.பல ஆண்டுகளாக விவசாயிகள் நன்செய் நிலங்களில், ஆடி மாதங்களில் விதைப்பு பணியை செய்யத் துவங்கினர்.

தற்போது இப்பகுதியில் தென் மேற்கு பருவ மழை போதிய அளவு பெய்வதில்லை. விவசாயிகள் விதைப்பு பணியை தாமதமாக துவங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு தாமதமாக மழை பெய்ததையடுத்து, விவசாயிகள் விதைப்பு பணியை ஆவணி,புரட்டாசி மாதங்களில் துவக்கினர். பயிர்கள் முளைத்த நிலையில் அடுத்தடுத்து மழை பெய்யாததால், பல கிராமங்களில் பயிர்கள் கருகியதையடுத்து, விவசாயிகள் மறுவிதைப்பு செய்தனர்.

பயிர்கள் முளைத்த நிலையில் மழை பெய்யாததால்,களையெடுப்பு பணியை துவங்காமல் இருந்தனர். வடகிழக்கு பருவ மழையை எதிர்பார்த்திருந்த நிலையில், தீபாவளியன்று
இப்பகுதியில் சிறிய அளவில் மழை பெய்தது. இதையடுத்து எப்படியும் வடகிழக்கு பருவ மழை தங்களை கைவிடாது என்ற நம்பிக்கையில், கண்ணமங்கலத்தில் விவசாயிகள் வயல்களில் களையெடுப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## இளையான்குடியில் விவசாய பணிகள் ஆரம்பம்

இளையான்குடி: இளையான்குடியில் வடகிழக்கு பருவ மழை துவங்கியதையடுத்து வயல்களில் களையெடுப்பு பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இளையான்குடியில் சில ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகள் வயல்களின் ஒரு பகுதியில் நாற்றங்காலில் நாற்று பாவி,நன்கு மழை பெய்ததும் அந்த நாற்றை பிடுங்கி நடவு செய்து வந்தனர்.பருவ மழை அளவு குறைய துவங்கியதையடுத்து விவசாயிகள் நடவு செய்யும் முறையை கைவிட்டுவிட்டனர்.பல ஆண்டுகளாக விவசாயிகள் நன்செய் நிலங்களில், ஆடி மாதங்களில் விதைப்பு பணியை செய்யத் துவங்கினர்.

தற்போது இப்பகுதியில் தென் மேற்கு பருவ மழை போதிய அளவு பெய்வதில்லை. விவசாயிகள் விதைப்பு பணியை தாமதமாக துவங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு தாமதமாக மழை பெய்ததையடுத்து, விவசாயிகள் விதைப்பு பணியை ஆவணி,புரட்டாசி மாதங்களில் துவக்கினர். பயிர்கள் முளைத்த நிலையில்

அடுத்தடுத்து மழை பெய்யாததால், பல கிராமங்களில் பயிர்கள் கருகியதையடுத்து, விவசாயிகள் மறுவிதைப்பு செய்தனர்.

பயிர்கள் முளைத்த நிலையில் மழை பெய்யாததால்,களையெடுப்பு பணியை துவங்காமல் இருந்தனர். வடகிழக்கு பருவ மழையை எதிர்பார்த்திருந்த நிலையில், தீபாவளியன்று
இப்பகுதியில் சிறிய அளவில் மழை பெய்தது. இதையடுத்து எப்படியும் வடகிழக்கு பருவ மழை தங்களை கைவிடாது என்ற நம்பிக்கையில், கண்ணமங்கலத்தில் விவசாயிகள் வயல்களில் களையெடுப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 30 மூட்டை நிலக்கடலை □35 ஆயிரத்துக்கு விற்பனை

இடைப்பாடி: சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நிலக்கடலை ஏலம் நடந்தது. கோரணம்பட்டி, பூலாம்பட்டி, எருமைப்பட்டி, கோனசமுத்திரம், சமுத்திரம், தாதாபுரம், வேம்பனேரி, குள்ளம்பட்டி, தேவூர், செட்டிப்பட்டி, பூமணியூர், கோனேரிப்பட்டி, ஆவடத்தூர், ஆடையூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 30 நிலக்கடலை மூட்டைகளை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். 60 கிலோ கொண்ட உலர்ந்த நிலக்கடலை மூட்டை □1,500 முதல் □1,900 வரையும் ஏலம் போனது. இதன்மூலம் மொத்தம் □35 ஆயிரத்துக்கு விற்பனையானது. கடந்த ஏலத்தைவிட, கிலோவுக்கு □4 முதல் □5 வரை குறைவாக ஏலம்போனதாக விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

## பயிர் காப்பீடு திட்ட விளக்க கூட்டம்

நாமக்கல்: நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில், கூட்டுறவுத்துறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்கள் மற்றும் கணினி இயக்குபவர்களுக்கு, பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தை துரிதப்படுத்தும் வகையில் விளக்க கூட்டம் நடந்தது. கலெக்டர் ஆசியாமரியம் தொடங்கி வைத்தார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கலியராஜ் திட்டம் தொடர்பான தொழில்நுட்ப விவரங்களை விளக்கினார்.

கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (பொ) ராமதாஸ் பேசுகையில், 'பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேரும் விவசாயிகளின் பதிவுகள் குறித்தும், துரிதமாக கடன் வழங்கும் முறைகளை பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை துணை இயக்குநர்கள் லோகநாத பிரகாசம், சுப்பையா ஆகியோர் காப்பீடு திட்ட செயலாக்கம் பற்றி விரிவாக எடுத்துக் கூறினர்.இதில், சேலம் மத்திய கூட்டுறவு வங்கி அலுவலர்கள் மற்றும் நாமக்கல் மாவட்ட அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர்கள், டான்பெட் அலுவலர் ஆகியோர் பங்கேற்றனர்.

## நெல் சாகுபடி விவசாயிகளுக்கு மானியத்தில் விதைகள் விநியோகம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நெல் சாகுபடி விவசாயிகளுக்கு மானிய விலையில் சான்று விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது. இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சங்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கெலவரப்பள்ளி அணை, கே.ஆர்.பி அணை, பாரூர் ஆகியவை முழுக்கொள்ளவு நிலையில் உள்ளதால், இரபி பருவத்தில் சுமார் 10 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படும்.

இப்பருவத்திற்கு தேவையான சான்று பெற்ற உயர்ரக நெல் ரகங்கள் ஏடீடி 39 4800 கிலோ, ஜெஜிஎல் 1798 3800 கிலோ, கோ 70,000 கிலோ, கோ51 40,000 கிலோ ஆகியவை இம்மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டா வேளாணமை விரிவாகமையங்களிலும் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நெல் விதைகளை விதை கிராம திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம்

ஆகியவற்றில் கிலோ ஒன்றிற்கு □10 மானியமாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும் தற்போது நெல் நடவு கூலி ஆட்கள் பற்றாக்குறை உள்ளதால், நெல் விவசாயத்தை ஊக்குவிக்க மத்திய, மாநில அரசுகள் இணைந்து இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு □5 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. இம்மான்ய தொகையினை விவசாயிகளின் வங்கி கணக்கில் சேர்க்கப்படுகிறது. மேற்கூறிய ரகங்கள் உயர் விளைச்சல் தரக்கூடியவையாகவும், சன்ன ரகம் குறுகிய வயதுடையவை, பூச்சி தாக்குதல் குறைவாகவும், சாயாத தன்மை கொண்டதாகவும், புகையான் நோய் எதிர்ப்பு தன்மை கொண்டதாவும் உள்ளது.

எனவே, விவசாயிகள் அனைவரும் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி மான்ய விலையில் சான்று பெற்ற நெல் விதைகளை வாங்கி பயன்பெற வேண்டும். மேலும், பிரதான் மந்திரி புதிய பயிர் காப்பீடு திட்டத்தில் நெல் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் ஏக்கருக்கு □367.50 பிரீமியம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் செலுத்தி, அனைத்து நெல் சாகுபடி விவசாயிகளும் இத்திட்டத்தில் பெரும் திரளாக பங்கு கொள்ள வேண்டும். கூடுதல் விவரங்கள் பெறுவதற்கு விவசாயிகள் தங்கள் கிராமங்களுக்கு அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மைய உதவி வேளாண்மை அலுவலர், வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை நேரில் அணுகி பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

**வாழை இலைக்கட்டு விலை உயர்வு**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு நேற்று கொண்டு வரப்பட்ட வாழை இலைக்கட்டுகள் அதிகபட்சமாக ரூ.1,200 வரை விலை போனது. பொள்ளாச்சி தேர்நிலை அருகே உள்ள மார்க்கெட்டில் வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாழை இலை ஏலம் நடக்கிறது. சுற்றுவட்டார கிராமங்களான ஆனைமலை, கோட்டூர், பொன்னாபுரம், வடக்கிபாளையம்,

அம்பராம்பாளையம், நெகமம் மட்டுமின்றி பழனி, ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்து விவசாயிகள் இலைக்கட்டுகள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். கடந்த சில வாரங்களாக மார்க்கெட்டுக்கு வாழை இலை வரத்து அதிகமாக இருந்தது.ஆனால்,அந்த நேரத்தில் சுபமுகூர்த்த நாட்கள் குறைவால் ரூ.400 முதல் அதிகபட்சமாக ரூ.650 வரையே விலை போனது.

இந்நிலையில், நேற்று நடந்த சந்தையின்போது சுற்றுவட்டார பகுதியிலிருந்து வாழை இலைக்கட்டு வரத்து ஓரளவு இருந்தாலும், இந்த வாரத்தில் தொடர்ந்து சுபமுகூர்த்த நாட்கள் உள்ளதால், கூடுதல் விலைக்கு விற்பனையானது. இதில், 100 எண்ணம் கொண்ட ஒருகட்டு ரூ.600 முதல் அதிகபட்சமாக ரூ.1,200 வரை போனது. வரும் வியாழன் அன்று நடக்கும் சந்தையின்போது இன்னும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## விதை கிராம திட்டப் பயிற்சி

திருவெறும்பூர்: திருவெறும்பூர் அருகே உள்ள பாப்பாகுறிச்சியில் திருவெறும்பூர் வட்டார வேளாண்மை விரிவவாக்க மையம் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விதை கிராம திட்ட பயிற்சி நடந்தது. திருச்சி வேளாண்மை இணை இயக்குனர் சரவணன் தலைமை வகித்து நெல்லில் புதிய ரகங்கள் குறித்தும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் குறித்தும், திருவெறும்பூர் வேளாண்மை உதவி இயக்குநர் கோமதி தங்கம் விதை உற்பத்தி மற்றும் அரசின் திட்டங்களை பற்றியும், வேளாண்மை அலுவலர் முத்துசெல்வி நெல் மற்றும் உளுந்து விதை பண்ணை பற்றியும், வேளாண்மை விதை ஆய்வு அலுவலர் மோகன்தாஸ், விதை பரிசோதனை நிலைய அலுவலர் சபாபதி ஆகியோர் விதை ஆய்வு விதை பரிசோதனை விபரங்கள் பற்றியும் எடுத்துக் கூறினர்.

பயிற்சியில் பாப்பாக்குறிச்சி, கீழமுல்லக்குடி, தேனேரிபட்டி, அரியமங்கலம் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் சரவணன், அமல்ராஜ், ஹேமா மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் செல்வி மற்றும் பாபு ஆகியோர் செய்திருந்தனர். வேளாண்மை அலுவலர் செல்வராணி வரவேற்றார். வேளாண்மை அலுவலர் புவனேஸ்வரி நன்றி கூறினார்.

## தென்னையை தாக்கும் செம்பான் சிலந்தியை கட்டுப்படுத்தும் முறை வேளாண் அதிகாரி விளக்கம்

சேதுபாவாசத்திரம் : தென்னையை தாக்கி அதிக பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் ஈரியோபைட் சிலந்தியை (செம்பான் சிலந்தி) கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தயாளன் விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:

ஈரியோபைட் சிலந்தி மிகச்சிறிய வெளிரிய பழுப்பு நிற தோற்றம் உடையவை. முட்டை பருவம், இரண்டு புழு பருவங்கள் மற்றும் வளர்ந்த சிலந்தி என நான்கு நிலைகளை கொண்டுள்ளது. 7 முதல் 9 நாட்களை வாழ்க்கை சரிதமாக கொண்டவை. நான்கு கால்களை கொண்ட ஊசி போன்ற வாய் அமைப்பு உள்ளவை. பெண் சிலந்தி 30 முதல் 50 முட்டைகள் வரை இடும். இச்சிலந்தி இளங்குரும்பைகளின் தொட்டுகளுக்கு அடியில் இருந்து கொண்டு குரும்பையின் மென்மையான திசுக்களில் இருந்து சாற்றை உறிஞ்சி குடித்து உயிர் வாழ்கிறது.

1 முதல் 6 மாத இளங்குரும்பைகளில் சாற்றை உறிஞ்சுவதால் தொட்டுக்கு கீழே முக்கோண வடிவில் வெளிர் மஞ்சள் அல்லது பழுப்பு நிற திட்டுக்கள் ஏற்படும். பாதிக்கப்பட்ட குரும்பைகள் வளர்ந்து இளம் காய்களாக மாறும்போது பழுப்பு நிற பகுதியின் அளவு மேலும் அதிகமாகி நீளவாக்கில் சிறு சிறு வெடிப்புகள் தோற்றும். முற்றிய காய்களில் இப்பழுப்பு நிற திட்டுகள் கடினமாவதால் நீளவாக்கில் பெரிய வெடிப்புகள் ஏற்படும். அதிலிருந்து பிசின்போன்ற திரவம் வெளிப்படும் மேலும் 4 மாத இளங்குரும்பைகள் உதிர்ந்துவிழும் வாய்ப்புள்ளது.

இதனால் காய்களின் அளவு சிறுத்து, பருப்பின் அளவும் 10 முதல் 30 சதவீதம் வரை குறைந்து விடுகிறது. இத்துடன் தேங்காய் உரிப்பதும் கடினமாகிறது. எண்ணிக்கை குறைவதில்லை. ஆனால் காய்களில் அளவு சிறுத்துவிடுகிறது. இதனால் வியாபாரிகள் நிராகரித்து விடுகின்றனர். தேங்காய் உரிமட்டை கடினமாவதால் அதிலிருந்து கிடைக்கும் நாரின் அளவும், தரமும் பாதிக்கப்படுகின்றது.

இந்த சிலந்தியினை கட்டுப்படுத்திட ஒரு மரத்திற்கு 1 வருடத்திற்கு யூரியா 1.300கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2கிலோ, பொட்டாஷ் 3.500கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5கிலோ, நன்கு மக்கிய தொழு உரம் 50கிலோ மற்றும்

நுண்ணூட்ட சத்துக்களான போராக்ஸ் 50கிராம், ஜிப்சம் 1கிலோ, மெக்னீசியம் சல்பேட் 1/2கிலோ இட வேண்டும். மேலும் அசார்டிராக்டின் 1சத தாவர பூச்சிக்கொல்லி மருந்தினை சிறு கைதெளிப்பான் மூலம் 45 நாட்கள் இடைவெளியில் 1 முதல் 6 மாத குரும்பைகளின் மேல் படும்படி குறைந்தது 3 முறைகள் தெளிக்க வேண்டும்.

முதல் முறை அசார்டிராக்டின் 1சத மருந்து 5மில்லியினை 1லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இரண்டாவது முறை 30மில்லி வேப்பெண்ணையை 1லிட்டர் தண்ணீரில் கலந்து அத்துடன் டீபால் ஒட்டுதிரவம் சிறிதளவு சேர்த்து தெளிக்க வேண்டும். மூன்றாவது முறை அசார்டிராக்டின் 1சத மருந்து 5மில்லியை 1லி தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இந்த மருந்தினை ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை உள்ள காலத்தில் தெளிப்பது நல்ல பலனை தரும். கைதெளிப்பான் கொண்டு தெளிக்க முடியாத உயரமான மரங்களுக்கு அசார்டிராக்டின் 1சத மருந்து 10மில்லி மருந்தினை 10மில்லி தண்ணீரில் கலந்து வேரில் கட்டி இச்சிலந்தியின் சேதத்தினை வெகுவாக கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## வயல்களில் திரியும் எலி அட்டகாசத்தை ஒழிக்கும் வழிமுறைகள் வேளாண்துறையினர் ஆலோசனை

ராமநாதபுரம், : வயல்களில் திரியும் எலிகளின் அட்டகாசத்தை ஒழிப்பது எப்படி என்பது குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.விவசாய நிலங்களில் விளைவிக்கப்படும் பயிர் வகைகளை உண்ண வரும் எலிகளால் விவசாயிகள் கடும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். இதனைத் தவிர்க்கும் முறை குறித்து வேளாண்துறையினர் கூறியுள்ளதாவது: வயல்களில் பயிர் செய்ய ஆரம்பிக்கும் முன்னரும் பயிரில்லாத காலத்திலும் கூடுமானவரை எல்லா எலி வளைகளையும் தோண்டி அழிக்க வேண்டும். வரப்புகளின் ஓரங்களில் களை எடுத்து மண் அடைத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் எலிகள் வளைகளை அமைக்க இயலாது. உழும்போது ஆழமாக உழுவதன் மூலம் எலி வளைகளை உடைக்கலாம். குறுகிய வரப்புகள் அமைக்க வேண்டும். புதர்களை அழிக்க வேண்டும்.

வைக்கோல் போர்களை வயலுக்கு அருகில் அமைக்க கூடாது. ஆந்தைகள் போன்ற இரவு பறவைகள் அமர ‘டி’ வடிவ குச்சிகளை நட வேண்டும். அதன் மூலம்

எலிகளை இயற்கை முறையில் அழிக்கலாம். வெளிச்சமான விளக்கின் மூலம் ஓடாமல் நிற்கும் எலிகளை தடியால் அடித்து கொல்ல வேண்டும். எலிகளின் இயற்கை எதிரிகளான ஆந்தை மற்றும் பாம்பு போன்றவற்றை அழிக்காமல் இருக்க வேண்டும். மூங்கில் கிட்டிகளை 1 ஏக்கருக்கு 20 கிட்டிகள் வீதம் வைத்து எலிகளை பிடித்து அழிக்கலாம்.

வாயகன்ற பானைகளில் சாணம் கலந்த நீரை நிரப்பி மேற்பரப்பில் சோறு போட்டு வைத்தால் அவற்றை உண்ண வரும் எலிகள் அந்த சாண நீரில் மூழ்கி இறந்து விடும். எ.எல்.பி போன்ற விஷ மாத்திரைகளை வளைக்கு 1 வீதம் போட்டு ஈரமண் போட்டு மூட வேண்டும். துத்தநாக பாஸ்பைடு விஷ உணவு தயாரித்து வைத்து எலிகளை அழிக்கலாம். ஆண்ட்டிகொயாகுலண்ட் கலவை தயாரித்து வைத்து எலிகளை அழிக்கலாம். ப்ரோமோடையலான் மருந்து கொண்ட முஷ் முஷ் என்ற உணவு கட்டியை ஏக்கருக்கு 20 என்ற எண்ணிக்கையில் வைத்து எலிகளை அழிக்கலாம். இவ்வாறு கூறி உள்ளனர்.

## ரூ.1 கோடிக்கு கொப்பரை ஏலம்

மொடக்குறிச்சி, : அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொப்பரை ஏலம் நடைபெற்றது. விவசாயிகள் 3,543 மூட்டைகளில் 1 லட்சத்து 76 ஆயிரத்து 8 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தர கொப்பரை கிலோ ரூ.59.45 முதல் 62.70 வரையும் இரண்டாம் தரம் கிலோ ரூ.47.20 முதல் 60.85 வரையும் விலை போனது. மொத்தம் ரூ.1 கோடியே 2 லட்சத்துக்கு விற்பனை ஆனது. அதேபோல 29 ஆயிரத்து 914 தேங்காய்கள் கொண்டு வந்திருந்தனர். இதில் அதிகபட்ச விலை டன் ஒன்றுக்கு ரூ.17 ஆயிரத்து 100, குறைந்த விலை டன் ஒன்றுக்கு ரூ.12 ஆயிரத்து 690 என ரூ.1 லட்சத்து 66 ஆயிரத்துக்கு ஏலம் போனது.

## திருப்புவனத்தில் மழை பொய்த்தாலும் பாசனம் தொடர்கிறது

திருப்புவனம், : திருப்புவனம் பகுதியில் போதிய மழை இல்லை. தென்மேற்கு பருவகாற்றால் பெய்யும் மழையும் பொய்த்து போனது. வடகிழக்கு பருவமழையும் எதிர்பார்த்த மழையை தரவில்லை. ஆனால் திருப்புவனம் பகுதி விவசாயிகள் மழை பொழியும் என்ற நம்பிக்கையில் மோட்டார் பம்ப் செட் மூலம் கிடைக்கும்

தண்ணீரை வைத்து உழவுப்பணி, நாற்றுப்பறிக்கும் பணி, நடவுப்பணியில் முழுவீச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர்.